

# செயலற்ற போராட்டமும்

104

104/1-54

OFFICE OF THE REGISTRAR
12 JAN 1954



"செங்கதிர்"
ஆசிரியர்

S. காமராஜ்
மதுரை.

# தி. மு. க.வின்

# சித்தாந்த

211,4M49
N54

நீங்கள் இனிமையுடன் இருக்க

# ★ நியூ வசந்தா ★

## டால்கம் பவுடரை

எப்பொழுதும் உபயோகியுங்கள்.




எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

இன்றே வாங்குங்கள்.

யாரிப்பு:- **P. S. பழனி செட்டியார்,**

யூ வசந்தா டால்கம் பவுடர் கம்பெனி,

ண்ணுத்தோப்பு பூந்தோட்டம், மதுரை.

லட் பவுடர், பிரபாத்

மேலானது.

பதிப்பகத்தின் 5-வது
வெளியீடு.

# செயலற்ற போராட்டமும் தி.மு.க. வின் சித்தாந்தமும்


சேங்கதிர் ஆசிரியர்:
**எஸ். காமராஜ், கவுன்சிலர்**


★

**0—4—0**


**பெர்னுட்ஷா பதிப்பகம்,**
92, மேலமாசி வீதி, மதுரை.

முதற்பதிப்பு] [1954—ஜனவரி.

# பஞ்சம் வரக் காரணம் என்ன?

வற்றாத ஜீவநதிகள், வளமான நிலங்கள், வளைந்து வளைந்து ஓடும் வாய்க்கால்கள், வாய்க்கால்களின் ஓரமாக காட்சியளிக்கும் பச்சைப் பசேலென தோன்றும் வயல்கள். இப்படிப் பசுமை நிறைந்த நாட்டிலா பஞ்சம்? பட்டினிச் சாவுகள்?

ஆம் பஞ்சமேதான். பஞ்சமென்றால் சாதாரணப் பஞ்சமா? பாரதம் என்றும் கண்டிராத பயங்கரமான பஞ்சம்.

இந்தப் பஞ்சத்திற்கு யார் காரணம் என்று யோசிக்கிறீர்களா தோழர்களே? தெரியவில்லையா இன்னும் இதோ தெரிகிறதே பாருங்கள் பார்ப்பனீய ஆதிக்கமும் வடவர்கள் சுரண்டலும் தான் தமிழகத்தின் பஞ்சத்திற்கு காரணமானவர்கள்.

சுரங்கத்திலே தங்கம், சுற்றியுள்ள கடல்களிலே முத்து என்ன செல்வம்! என்ன செல்வம்! நமது இன்பத் திராவிடத்திலே.

செல்வமிகுந்த நாட்டிலே செத்து மடிகின்றனர் மக்கள். பொருள் நிறைந்த நாட்டிலே பெற்ற குழந்தையை விற்கின்றனர் தாய்மார்கள்.

ஏன் இந்த இழி நிலை?

வந்தவர்களை எல்லாம் வாழவைத்த திராவிடத்தில் இந்த வகைகெட்ட நிலை எத்தனை நாளாய்? சொந்தநாட்டு மக்கள் சோறு இல்லாமல் சாவதை கொஞ்சமேனும் சிந்தித்தாயா? திராவிடத் தோழனே, சிந்தித்துப் பார் நன்றாக சிந்தித்துப் பார்.

கண்ணைத் திறந்து பார்த்தால் காணுவாய் உண்மைகளை அதோ..........பார்.

வட்டிக்கடை நடத்துகிறார்களே வட நாட்டார்கள் தெரிகிறதா? அவர்கள் தான் வளமான திராவிடத்தை வரண்ட பாலைவனமாக்கியது.

இதோ......பார் எதிரிலே.

வரிசை வரிசையாக அமைந்திருக்கும் அக்கிராகார வாசிகள் அவர்கள் தான் பஞ்சத்தைச் சிருஷ்டித்தவர்கள் ஆகவே பாமர மக்களைக் காப்பாற்ற, பனியாக்களையும், பார்ப்பனர் ஆதிக்கத்தையும் ஒழித்துக்கட்டி வடவர்கள் பிடியிலிருந்து விலகிய தனித் திராவிடம்.

பிரிந்த திராவிடத்திலே, பொது உடமைப் பூங்கா பூத்துக் குலுங்கும். ஆகவே புறப்படுங்கள் தோழர்களே புறப்படுங்கள் போர்க்கொடியேந்தி. இப்படியாக தி. க. தி. மு. க. ஏடுகள் எழுதுகின்றன, தலைவர்கள் முழங்குகின்றனர்.

## யார் சுரண்டுவது?

தமிழகத்தின் பொருளாதாரத்தின் மீது தனி ஆதிக்கம் செலுத்துவது யார்?

இதைப் பார்க்கும் முன்னால் இந்தத் திராவிட இயக்கம் எப்படிப் பிறந்தது எங்கே வளர்ந்தது என்று இதன் சரித்திரத்தை திரும்பிப் பார்ப்போம்.

## பிறந்தது ஜஸ்டிஸ்க் கட்சி.

1917-ல் ஜார்மன்னன் ஒழிக்கப்பட்டான்.
மக்கள் ஆட்சி மலர்ந்தது.
ஒழிந்தது நிலப்பிரபுத்துவம்
அழிந்தது முதலாளித்துவம்.
விடுதலைப் பாதையில் வீரநடை போட்டார்கள் ரஷ்ய மக்கள்.

இதன் எதிரொலி இந்தியாவிலே
தென்றலாக வீசியது தென்னாட்டிலே புரட்சி இயக்கம்.
நிலப் பிரபுக்கள் நிலைதடுமாறினர்.

ஒன்றுபட்டனர் தமிழக நிலப் பிரபுக்கள்.
ஜாதிக்கொடுமை ஒழிக என்றார்கள்
ஜஸ்டிஸ் கட்சி என்று பெயர் வைத்தார்கள்.
பார்ப்பனரல்லாத இயக்கம் என்று பகல்வேஷம் போட்டார்கள்.
அடுத்தாற்போல் தேர்தல் 1920-ல்.
பகிஷ்கரித்தது காங்கிரஸ் கட்சி.
பதவியேறியது ஜஸ்டிஸ் கட்சி.

பார்ப்பனரல்லாதாரின் வெற்றி என்று முழங்கினார்கள் ஆனால் யாருக்கு நன்மை கிடைத்தது? பார்ப்பனரல்லாத பாமர விவசாயிகளுக்கோ, பாட்டாளிகளுக்கோ இல்லை. ஆனால் ஏகாதிபத்தியத்தின் தாசர்களாக விளங்கினார்கள். ஆதிபத்தியத்தின் தாசர்களாக ஆட்சிசெலுத்துவோம் என்று ஆணையிட்டுக் கொண்டார்கள். ஆனால் காலம் மாறியது அடுத்தார்போல் தேர்தல் வந்தது 1926-ல் 1934-ல் 1937-ல் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடிய காங்கிரஸ் வெற்றி பெற்றது. தாசர்களாக இருந்த ஜஸ்டிஸ் கட்சி சட சட என வீழ்ச்சியுற்றது. இந்தத் தேர்தல் தமிழ் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியை எடுத்துக் காட்டிற்று.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்ற பகல்வேஷம் கிழித்தெறியப் பட்டது. தோல்வியடைந்த ஜஸ்டிஸ் கட்சி தொடர்ந்து பார்ப்பனரல்லாதார்க்காக பாடுபடுவதாக நாடு முழுவதும் பவனிவந்தார்கள். பார்ப்பனீய எதிர்ப்புப்பிரச்சாரம் பலமாக நடந்தது.

## காங்கிரசுக்குள் ஜாதிப் பூசல்.

காங்கிரஸ் தலைவரான வ. வே. சு. அய்யரவர்கள் சேர்மாதேவியில் (குருகுலம்) தேசீய பள்ளிக்கூடம் ஒன்று நடத்தி வந்தார். அந்தப் பள்ளியில் பார்ப்பன மாணவர்களுக்கு ஓர் இடத்திலும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு மற்றோர் இடத்திலும் பிரித்து உணவளித்து வந்தார்கள்.

பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தலைவர்களுக்கு இது வெறுப்பளித்தது. எதிர்த்தனர்.

இரண்டு வருட காலமாக போராட்டம்

சமபந்தி போஜனம் என்ற கோரிக்கையின் பேரில் கடைசியாக, காந்திஜியின் முடிவிற்கு விடப்பட்டது. 1926-ம் வருடம் காந்திஜி தலையிட மறுத்துவிட்டார்.

இதனால் வெறுப்படைந்தார்கள் பார்ப்பனரல்லாத தலைவர்கள் வெளியேறினார்கள் காங்கிரசை விட்டு.

இதிலே ஈ. வெ. ராவும் ஒருவர்.

தனிக்கட்சி ஆரம்பித்தார்கள்.

அதன் பெயர் சுயமரியாதைக் கட்சி என்று சொல்லி அழைத்தார்கள்.

பார்ப்பனர்களின் ஜாதி அகந்தையை ஒழித்துக் கட்ட ஒன்றுபடுங்கள் என்று கோஷமிட்டார்கள்.

ஜாதிக்கொடுமைகளை ஒழிப்போம்.

புரோகித சடங்குகளை புதைப்போம்.

மூடப் பழக்கவழக்கங்களை முறியடிப்போம்.

ஆண்களுக்கு பெண்கள் அடிமைத்தனத்தை அழிப்போம் என்று ஆவேசப் பிரச்சாரம் செய்தார்கள்

ஜாதி முறைகளை எல்லாம் ஒழிப்போம் என்று இவர்கள் கர்ஜித்தாலும் நடைமுறையில் இவர்கள் எதிர்த்து வந்தது பார்ப்பனீய சமூகம் ஒன்றைத்தான்.

தேசிய இயக்கத்திலிருந்து வெளியேறிய சு. ம. இயக்கத்தினர் பிரதானமாக பார்ப்பனீய எதிர்ப்பு இருந்த காரணத்தினால்தான் பிராமணரல்லாத இயக்கம் நடத்தி வந்த ஏகாதிபத்திய தாசர்களுடன் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுடன் இரண்டறக் கலந்தனர் பார்ப்பனீய எதிர்ப்பு என்ற அடிப்படையில்.

## சைமன் கமிஷன் பகிஷ்காரம்.

ஏகாதிபத்தியத்தின் சைமன் கமிஷனை எதிர்த்து இந்திய தேசிய இயக்கம் போராடிக் கொண்டிருக்கும்போது, இதை

எதிர்த்து போராடுவது இந்தியர்களின் கடமை என்பதை மறந்து, சு.ம. வும், ஜ. கட்சியும், எங்களுக்கு ஏகாதியத்தியம் அல்ல எதிரி, பார்ப்பனீயம் தான் என்று பறை சாற்றினார்கள் தேசிய இயக்கத்திலிருந்து பிரிந்த சு. ம. கட்சி நிலப் பிரபுக் களின் ஏகாதிபத்திய ஆதரிப்புக் காரர்களான ஜஸ்டிஸ் கட்சி யுடன் வால்ப்பிடித்து நின்று, வருக வருக சைமன் கமிஷனே வருக. தங்கள் வரவு நல்வரவாகுக. என்று வாழ்த்துரை கூறினார்கள். ஏகாதிபத்தியம்இருந்தால்தானே நிலப்பிரபுத்து வம் பிழைக்க முடியும். ஆகவே ஜஸ்டிஸ் கட்சி சைமன் கமிஷனே வரவேற்றது. இந்த வரவேற்பின் முன்னணியிலே ஈ. வெ. ராவும் ஒருவர்.

இந்த இழுக்கை என்றும் தமிழகம் மறவாது. ஏகாதி பத்திய ஆதரவு பார்ப்பனரல்லாத உரிமைப்போர் என்று வரட்டுவாதம் செய்தார்கள்.

தேச விடுதலைப் போராட்டத்தைக் காட்டிலும் பார்ப்ப னர் எதிர்ப்புப் போராட்டம்தான் முக்கியம் என்று முரசடித் தார்கள்.

1937-ல் பொதுத்தேர்தலில் காங்கிரஸ்கட்சியை எதிர்த்து ஜஸ்டிஸ் கட்சி போட்டியிட்டது. சு. ம. கட்சி திராவிடநாடு திராவிடர்க்கே என்ற கோஷத்தை மக்கள் மத்தியில் வைத்து வடவர்கள் ஆதிக்கத்திலிருக்கும் காங்கிரசை முறியடித்து திராவிடர்களே (நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்தியத்தின் தாசர் களே) தேர்ந்தெடுக்கும்படியாக பிரச்சாரம் செய்தார்கள். தேர்தலில் தோல்வியடைந்தார்கள் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களே ஆதரித்ததாலும்,ஏகாதிபத்தியத்தை எதிர்க்கா மல் இருந்ததாலும் சு. ம. கட்சி தேசபத்தியுள்ள தமிழக மக்கள் முன்னால் தலே நிமிர்ந்து நிற்க முடியவில்லே.

இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமானவுடன் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைத்தனர் இந்தியசுதந்திரத்தை வற்புறுத்தாமல்.

அவர்கள் கோரிக்கை எல்லாம் கொடுக்கும் பதவி பார்ப்பனரல்லாதோர்க்குக் கொடுக்கவேண்டும் என்ற ஒரே குறிக்கோள் தான்.

அதன் காரணமாக இந்திய விடுதலைப் போராட்டத்தை அடக்க ஏவிவிடப்பட்ட அடக்குமுறையைக்கூட கண்டிக்கவில்லை சு. ம. ஜ. கட்சி. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடிய காரணத்திற்காக கண்ணகி பரம்பரைப் பெண் மணிகள் கற்பை இழக்கும்போது கார்களிலே பவனி வத்தார்கள் துரோகி கூட்டத்தார்களாக.

இந்த மோசமான செயலை எந்தத் தமிழனும் ஆதரிக்கவில்லை தமிழகத்திலே சு. ம. கட்சியும், ஜ. கட்சியும் கல்லறை நோக்கி வீரநடை போட்டுக்கொண்டிருந்தது.

ஆட்சியாளர்களை ஆதரித்த காரணத்தினல் அழிந்து வருகிறது சு. ம. இயக்கம் என்பதை அறிந்தார் அண்ணுதுரை.

ஆட்சியாளர்களின் அடைமொழிப் பட்டத்தை உதறித் தள்ளுங்கள் என்று உத்தரவிட்டது 1944-ல் நடந்த சேலம் மகாநாட்டில். சிலர் பட்டம் துறந்தனர் பலர் கட்சி மாறினர், ஜஸ்டிஸ்கட்சி தமிழகத்தின் துக்கசின்னம் என்பதை அறிந்த கட்சித் தலைவர்கள், திராவிடக்கழகம் என்று பெயரை மாற்றினர்.

## திராவிடக்கழக பிரச்சாரம்.

பார்ப்பனீய எதிர்ப்புப் பிரச்சாரம் பலிக்காததைக் கண்ட தி க. தலைவர்கள் பாருங்கள் சோவியத் யூனியனை சீனுவின் முன்னேற்றத்தை, மாசேதுங்கின் சாதனைகளையும் பாருங்கள் என்று விரிவான பிரச்சாரம் செய்தார்கள் இந்த உண்மைப் பிரச்சாரத்தின் மத்தியிலேயே ஆரியர் திராவிடர் என்ற இனவெறி விஷவித்தையும் ஊன்றினர்கள்.

பிரஜா உரிமைக்காக போராடினர்கள்.

அடக்குமுறையைக் கண்டித்தார்கள், மார்க்சிஸமும், லெனினிஸமும் மகத்தான கொள்கைகள் அதற்கு மாறுன

கொள்கை எந்த உலகத்திலும் இல்லை என்று பேச முன் வந்தார்கள்.

இப்படிப்பட்ட ஜனநாயக பிரச்சாரத்தினால் முற்போக்கு எண்ணங்கொண்ட இளைஞர்களின் சிலர்மத்தியில் செல்வாக்கு வளர்ந்தது இளைஞர்கள் கட்சிக்குள் இழுக்கப்பட்டார்கள்.

## தி. க. வின் ஜனநாயகம்.

இப்படியாக ஜனநாயக இயக்கங்களைப்பற்றி பிரச்சாரம் செய்யும் கட்சிக்குள் ஜனநாயகம் மறுக்கப்பட்டு வந்தது. கட்சி நிதி பற்றியும் கொள்கை பற்றியும் விமர்சனம் செய்வதை தலைவர் ஈ.வெ ரா. விரும்பவில்லை. தடுத்தார். தூத்துக்குடியில் நடந்த மகாநாட்டில் ஈ. வெ. ரா. பகிரங்கமாகவே கூறினார். தன்னைப் பிடிக்காதவர்கள் கட்சியிலிருந்து வெளியேறிவிடவும், தன் கட்சியில் முட்டாள்கள் இருந்தால் போதும் இடும் கட்டளையை நிறைவேற்ற அறிஞர்கள் தேவையில்லை என்றார்.

இந்த ஜனநாயகமற்ற போக்கை கட்சிக்குள் இருந்த முற்போக்கு எண்ணங்கொண்ட தோழர்கள் எதிர்த்தார்கள்.

## பெரியார் சொல்லும் நடைமுறையும்

ஜாதிக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறிய தி. க. (பெரியார்) தாழ்த்தப் பட்டோர்கள் என்று தனியாக இருப்பதற்கு அம்பேத்காருக்காதரவாக சம்மேளனத்தை ஆதரித்தார். தேசீய இனம் என்ற அடிப்படையில் இல்லாமல் முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் என்ற ஜாதிக் கோஷம் சரியானதே என்று வாதாடினார். அதோடு நின்று விடவில்லை பெரியார் எல்லாமதத்தைச் சேர்ந்தவர்களும் முஸ்லீம் மதத்தைத் தழுவவேண்டும் என்று மதப்பிரச்சாரத்தை முல்லாப்போல் நடத்தினார். காந்திஜி இருக்கும் வரையிலும் தாக்கிப் பேசிவந்த பெரியார் (தி. க.) காந்திஜி இறந்வுடன் இந்தியாவின் பெயரையே காந்திநாடு என்று மாற்றவேண்டும் என்று மார் தட்டினார். காரணம் கொலை செய்தவன் பார்ப்பன கோட்சே என்ற காரணத்தால், அப்போது தனித் திராவிடத்தை மறந்தார்போலும், பார்ப்பனீய எதிர்ப்பினால்.

அரசாங்கம் ஜனநாயக முறையில் நடைபெற வேண்டும் என்று வாதாடும் பெரியார் தன் கட்சிக்குள் ஜனநாயகத்தை மறுத்தார்.

எந்த நாட்டிலும் கேட்டிராத ஏன் நடந்திராத இனி மேல் நடக்கமுடியாத காரியத்தை கட்சிக்கு.........வாரிசு அதற்காக கல்யாணம் கட்சிக்குள் இருக்கும் கணக்கற்ற காளைகள் மீது நம்பிக்கை இல்லை தனக்கு நம்பிக்கைப் பாத்திரம் என்று கூறி பொருந்தாத் திருமணத்தை எதிர்த்துப் பேசிவந்த ஈ. வெ. ரா. அவர்களே திருந்தாமல் திருமணத்தை முடித்தார்.

ஈ. வெ. ரா. வயது 70 மணப்பெண் மணியம்மை வயது 30. இதை மறுத்துக்கேட்டால் என்னைக்காட்டிலும் அறிவாளி இந்த நாட்டிலே உண்டா? மார்க்ஸிசத்தை நான்தான் உண்மையிலேயே பின்பற்றுகின்றேன். மாஸ்கோவீதிகளிலே பவனிவந்தவன் நான், என்வயது என்ன? என் அனுபவம் என்ன? என்னைக் குறைகூற உங்களுக்கு அவ்வளவு தைரியமா? என்று சீறி விழுகின்றார் திராவிடத் தந்தை பெரியார்.

மாண்பு மிக்க மார்க்சிஸம் பெரியாரின் நடைமுறையைக் கண்டு கண்ணீர் வடிக்காமல் என்ன செய்யும்?

## தி. மு. க. வின் பிறப்பு.

முரண்பாட்டை வளர்த்தது
முரணான திருமணம்

முன்னாலேயே தி. க. வுக்குள் ஜனநாயக போராட்டம் நடத்திக்கொண்டிருந்த தோழர்களுக்கு முரணான திருமணம் முருக்கேற்றிற்று முரண்பாட்டை.

பிரிந்தனர் தி. க. வை விட்டு.

திரண்டனர் அண்ணாவின் தலைமையின் கீழ் திராவிட முன்னேற்றக் கழகம் என்று தீட்டினர் பெயரை.

இரண்டாக பிரிந்தாலும் கொள்கை ஒன்றுதான். தற்போது தி. க. தி. மு. க. என இந்த இயக்கங்களை சேர்த்து அழைப்போம்.

இரண்டு கட்சிகளும் கொள்கைகள் ஒன்றேயானாலும் நடைமுறை வேலைகள் தனித்தனியாக இருக்கின்றன. இவர்கள் கோஷமும் நடைமுறை வேலைகளையும் பார்ப்போம்.

## தேர்தலில் தி. க.

சமீபத்தில் நடந்த சென்னை சட்டசபைத் தேர்தலில் தி. க. சில இடங்களில் கம்யூனிஸ்டு அபேட்சகர்களை ஆதரித்தார்கள். சில இடங்களில் கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகர்கள் போட்டியிட்ட இடங்களில் கூட வாய்ப்பு இல்லை என்று வாய்வேதாந்தம் பேசி நிலப்பிரபுக்களையும் பிற்போக்கு வாதிகளையும் ஆதரித்தார்கள். சாமியப்ப முதலியார், ஆர். எஸ். சர்மா, ராமனுஜ முதலியார், சேத்தூர் ஜமீன்தார் போன்ற நிலப் பிரபுக்களையும் ஆதரித்ததின் காரணமாக சில இடங்களில் காங்கிரஸ் ஜெயித்தது.

## தேர்தலில் தி. மு. க.

தி. மு. க. தேர்தல் காலத்தில் ஓர் விசித்திர வாதம் செய்தார்கள். திராவிடநாடு உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டவர்களைத்தான் ஆதரிப்போம் என்று தாங்கள் ஆதரிக்கப்போகும் பிற்போக்கு வாதிகளுக்கு திரையாக உபயோகித்தார்கள் உறுதிமொழிப் பத்திரம் என்ற உதவாக்கரை ஸ்லோகத்தால்.

கையெழுத்திட்ட காருண்ய மூர்த்திகள், தியாகராஜன் செட்டியார் குடும்பம் எஸ். என். கே. சுந்தரம் போன்ற பிற்போக்கு வாதிகளை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்கள். முடிவு மாணிக்கவேலர்களும் பக்தவத்சல நாயுடுக்களும் சரியான பாடம் கொடுத்தார்கள் தி. மு. க. வின் உரிமை சாஸனத்திற்கு நாமம்.

கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் காலப்போக்கில் மறைந்தது.

ஆச்சாரியாரின் மந்திரிசபைக்கு ஆதரவு கொடுத்தவர்கள் உறுதி மொழியில் கையொப்பமிட்ட ஒருசில கனவான்கள்.

தேர்தலை திரும்பிப்பாருங்கள் தி. மு. க. தோழர்களே சிந்தியுங்கள்.

இன்று தமிழகத்தில் தோன்றியிருக்கும் பஞ்சத்திற்கு யார் காரணம் பார்ப்பன ஆதிக்கமா? அல்லது வடவர்கள் சுரண்டலா?

பஞ்சத்தையும் பட்டினியையும் பகட்டாகப் பேசி பார்ப்பனீய எதிர்ப்பு ஆவேசத்தைக் கிளப்பும் தி. க. தி. மு. க. தலைவர்கள் சிந்திக்க வேண்டும்,

பஞ்சத்திற்கு காரணம் வடவர்களும் பார்ப்பனர்களும் மட்டுமல்ல, இதோ இருக்கும் ஏகாதிபத்திய சுரண்டல்தான் பிரதான காரணம்.

தமிழகத்திலே 100-க்கு 60 சதவிகிதம் விவசாயிகள் தற்போது வாழ்க்கையில் அதிகம் தாக்கப்பட்டிருப்பவர்களும் பெரும்பாலும் விவசாயிகள்தான்.

அடுத்தபடியாக கஷ்டப்படுகிறவர்கள் கைத்தறி நெசவாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள்.

இந்த மூன்று பிரிவு மக்களையும் ஆதிக்கம் செலுத்தி அடிமைப்படுத்தி சுரண்டுவது யார்?

விவசாயிகளைப் பாருங்கள், இவர்கள் வறுமையால் வாடுகின்றனர், பசியால் கதறுகின்றனர், காரணம் பார்ப்பனீய ஆதிக்கம் என்று சொல்லமுடியுமா? அல்லது வடவர்கள் சுரண்டல் என்று வாதாட முடியுமா? பார்ப்பனீய சுரண்டல் என்பது பஞ்சாங்கத்தையும் தர்ப்பை புல்லையும் வைத்து மூடப் பழக்கவழக்கங்களை சிருஷ்டித்து இதனால் விவசாயிகள் சுரண்டப்படுகிறார்கள் என்றால் நம்பமுடியுமா? யதார்த்த பார்வையோடு பார்த்தால் இன்று மெஜாரிட்டி ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு எந்தப் பிராமணர்களும் வருவது கிடையாது. ஒருசில பணக்கார விவசாயி வீட்டில்தான் சடங்குகள் பார்ப்பனீய முறைப்படி தமிழகத்திலே நடைபெறுகின்றது. இதனால்தான் தமிழகத்தில் பஞ்சம் தாண்டவமாடுகின்றது என்று வாதாடுவது வரட்டு வாதமாகும்.

அடுத்தாற்போல் வடவர்கள் சுரண்டல் என்பது எந்த விவசாயிகளையும் நேரிடையாக இன்று பாதிப்பது கிடையாது

அவர்கள், நகரப்புறங்களிலே தொழிற்சாலைகள் லேவாதேவிக் கடைகள் பேங்குகளில் ஆதிக்கம், இதனால் கோடிக்கணக்கான விவசாயிகள் வாழ்க்கை குன்ற காரணம் இல்லை.

அப்படியானால் காரணம் இதோ,

60 சதவிகித விவசாயிகளை அடிமைப் படுத்தி அவர்கள் குடும்பங்களை அழித்து வருவது நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் தான்.

## இந்த நிலப் பிரபுக்கள் யார்?

குன்னியூர் சாம்பசிவ அய்யர் போன்ற பிராமணர்கள் இருக்கின்றார்கள் என்றாலும் தமிழகத்திலே மெஜாரிட்டியாக விவசாயிகளைச் சுரண்டுவது திராவிட (தமிழக) நிலப்பிரபுக்கள்தான். உதாரணமாக வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார், சீர்காழி ராமனுதமுதலியார் இவர்கள் ஒவ்வொருவருக்கும் 12,000 ஏக்கருக்கு அதிகமான நிலம் சொந்தம்.

நெடும்பலம் சாமியப்ப முதலியார் அவர்களுக்கு சுமார் 5000 ஏக்கர் நிலமுண்டு.

கபீஸ்தலம் மூப்பனார், பூண்டி வாண்டையார் கோட்டூர் முதலியார் போன்றவர்களுக்கும் ஒவ்வொருவர்களுக்கும் 5000 ஏக்கர் நிலமுண்டு. இராமநாதபுரம் ராஜா சிவகங்கை ஜமீன்தார், புதுக்கோட்டை மகாராஜா, எட்டையபுரம் மகாராஜா, சேத்தூர் ஜமீன்தார், ராஜா சர். முத்தையா செட்டியார், சர். R. K. சண்முகம் செட்டியார், W P A சௌந்திரபாண்டிய நாடார், நாடிமுத்துப் பிள்ளை இன்னும் எத்தனையோ ராஜாக்கள், எத்தனையோ ஜமீன்தார்கள், எத்தனையோ நாடார்கள், எத்தனையோ முதலியார்கள், செட்டியார்கள் இவர்களிடத்தில் லக்ஷக்கணக்கான ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கின்றது.

இந்த நிலப்பிரபுக்கள் நிலத்திலே இறங்கி நேரிடையாக விவசாயம் செய்வதில்லை. இதுபோக முஸ்லீம் மதங்களுக்குச் சொந்தமாக மடாலயங்களுக்குச் சொந்தமாக கிருஸ்தவ சர்ச்சுக்கு சொந்தமாக, இந்துக் கோயில்களுக்குச்

சொந்தமாக, இப்படியாக லக்ஷக்கணக்கான ஏக்ரா நிலமுண்டு இந்த லக்ஷக்கணக்கான ஏக்ரா நிலங்களில் பாடுபடுகின்றானே ஏழைத் திராவிட விவசாயி இவனுக்குக் கிடைப்பது வருமானத்தில் 25 சதவிகிதம் இருந்து சுரண்டும் நிலப்பிரபுக்களுக்கு 75 சதவிகிதம். இப்படியாக சுரண்டும் நிலப் பிரபுக்களில் ஆரியரும் ஒன்றுதான் திராவிடரும் ஒன்றுதான், இந்த லக்ஷக்கணக்கான ஏழை விவசாயி மக்களைச் சுரண்டும் நிலப்பிரபுக்களை மறைத்துக்கொண்டு அல்லது பாராமுகமாக இருந்துவிட்டு, நீங்கள் கஷ்டப்படுவதற்குக் காரணம் பார்ப்பனீயமும், வடவர்கள் ஆதிக்கமும் தான் என்றால் உண்மை சுரண்டலுக்கு வக்காலத்தா? என்று ஏன் கஷ்டப்படும் விவசாயி கேட்கமாட்டான்.

ஆகவே தான் கஷ்டம் தீர்க்கப்பட வேண்டும் என்றால் நிலப் பிரபுக்கள் ஒழிக என்கின்றான் கஷ்டப்படும் விவசாயி.

இல்லை, இல்லை உன்எதிரி பார்ப்பனீயமும், வடவர்களும் தான் என்கிறது தி. க. தி. மு. க.

ஆகவே உண்மையான எதிரிகள் யார்? என்று தி. க. தி. மு. க. தோழர்கள் சிந்திக்கட்டும்.

### தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவது யார்?

அடுத்தபடியாக கஷ்டப்படுகிறவர்கள் தொழிலாளர் வர்க்கம்

தொழிலாளர்களை சுரண்டுவது யார் தமிழகத்திலே என்று சிந்திப்போம்.

வடவர்களா? பார்ப்பனீயமா? வெள்ளை முதலாளிகளா? தமிழகத்தை சுரண்டும் சண்டாளர்கள் யார்?

வடவர்கள், இவர்கள் தமிழகத்தில் சில இடங்களில் தொழிற்சாலை நடத்துகிறார்கள் என்பது உண்மை. அதனால் தமிழகத்தை சுரண்டிவிடுகிறார்கள் என்றால் அது விரோதவாதமாகும். தமிழகத்தின் பொருளாதாரத்தின் மீது உண்மையில் ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் 100-க்கு 90 வெள்ளை முதலாளிகள். 10 சதவிகித சுரண்டலை நடத்தகிறவர்கள்

திராவிட முதலாளிகள், வடநாட்டு முதலாளிகள், பார்ப்பனீய முதலாளிகள்.

தமிழ் நாட்டிலிருக்கும் மிகப்பெரிய மில்கள் B & C மில், ஆர் வி மில், பாண்டியன் மில், தூத்துக்குடி மில் அம்பா சமுத்திரம் மில், மேட்டூர் மில் இப்படியாக பஞ்சாலைகளிலே ஆதிக்கம் பாண்டியன் பேங்க், பாண்டியன் இன்சூரன்ஸ் கம்பெனி, பாண்டியராஜபுரம் சுகர் பாக்டரி, புனலூர் பேப்பர் மில்ஸ், பாரிக் கம்பெனி, நெல்லிக்குப்பம் ஸ்பிரீட் உற்பத்தி செய்யும் கம்பெனி, பல தேயிலைத் தோட்டங்கள், தேயிலைக் காப்பிக் கம்பேனிகள், ஜின்னிங் பாக்டரிகள், பல பாங்குகளிலே பங்குதார்களாக, இப்படியாக கேந்திர தொழில்களில் அதிக மூலதனம் போட்டு தமிழ்நாட்டு மக்களை தங்குதடையின்றி சுரண்டும் வரிசையின் முன்னணியில் இருப்பவன் வெள்ளை முதலாளி.

அடுத்தபடியாக சுரண்டும் சூரர்கள் வரிசையிலே No. 2 திராவிட முதலாளிகள் தான். வெள்ளைக்காரக் கம்பெனியான ஹார்வியின் பங்குதாராக முத்தையா செட்டியார் முதலீடு செய்திருக்கின்றார்.

ஹிந்துஸ்தான் No. 10 கார்பூட்டும் தொழிற்சாலையின் பங்குதாராக, வெள்ளை, வடவர், திராவிட அச்சை அதாவது கூட்டணியமைத்து சுரண்ட திட்டமிட்டு அதிலே முதல் வரிசையிலே முத்தையா செட்டியார் மைசூர் கம்பேனியில்.

முத்தையா செட்டியார் பாகிஸ்தூர் மைசூர் கெமிக்கல்ஸ் உரம்தயாரிக்கும் கம்பேனியிலும், சௌத்இந்தியா கார்ப்ரேஷனுக்கும், கோயம்புத்தூர் லோட்டஸ்மில்லுக்கும் முத்தையா செட்டியார் சொந்தக்காரர். ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் டைரக்டராக இருக்கிறார் ராமநாதன் செட்டியார். கரிமுத்து தியாகராஜன் செட்டியார் 2 மில்லும் 1 பேங்கும் 1 இன்சூரன்ஸ் கம்பெனியும் நடத்தி வருகிறார்.

கொச்சி அழகப்பா டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் அழகப்ப செட்டியாருக்கு சொந்தம். சினிமா வானிலே மின்னிக்கொண்டிருக்கிறார் A. V. மெய்யப்பச் செட்டியார், அடுத்தபடியாக

கோவை மில் முதலாளிகள் டி. எ. ராமலிங்கம் செட்டியார், சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், கங்கா நாயுடு, R. K. சண்முகம் செட்டியார். ஜி. டி. நாயுடு, சௌந்திரபாண்டிய நாடார், மதுரையில் கனகவேல் நாடார். இந்த திராவிட மூல தனம் தமிழகத்திலே இரண்டாவது ஸ்தானத்திலே நின்று திராவிடப் பாமர மக்களைச் சுரண்டுகிறார்கள்.

மூன்றாவது பார்ப்பனர்கள் மூலதனம்

தென்இந்தியாவின் மிகப்பெரிய போக்குவரத்தை தன் சொந்த ஆதிக்கத்தில் வைத்து நடத்தும் கம்பெனி T. V. S. சினிமாத்தொழிலில் ஜெமினிவாசன் முதன்மையிலிருக்கிறார். சில இன்சூரன்ஸ் கம்பெனிகளிலும் பேங்குகளிலும் பங்கு தார்களாக இருந்து சுரண்டுகிறார்கள்.

ஆகவே சுரண்டலிலே வரிசைக் கிரமமாகப்பார்த்தால் தமிழகத்தின் தலைமீது இருந்துகொண்டு ஆதிக்கம் செலுத்து வதும் சுரண்டுவதும் ஆங்கிலேயர்கள் தான் முதல்வரிசை யிலே. வடவர்கள் சுரண்டலும், பார்ப்பனீய சுரண்டலினால் மட்டும் தமிழகம் தாழ்ந்துவிடவில்லை. தமிழகத்தின் தாழ் விற்கு காரணம் ஏகாதிபத்திய பொருளாதார பிடிப்புதான் காரணம்.

சுரண்டப்படும் தொழிலாளர் வர்க்கம் முன்னால் வெள்ளை முதலாளியும், திராவிட முதலாளியும் பார்ப்பனீய முதலாளியும் ஒன்றுதான்.

அதனால் தான் தமிழ்நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் தடுத்து நிறுத்து வெள்ளையர்கள் சுரண்டலை, கட்டுப்பாடு செய் தொழிலதிபர்களின் லாபத்தை, என்று கோஷிக்கின்றது.

இதை மறந்து என்பிரதான எதிரி வடவர்தான் என்றால் எதிரிலே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் ஏகாதி பத்திய முதலாளியையும் ஐயோ–அப்பா... என்று சுரண்டிக் கொண்டிருக்கும் திராவிட முதலாளியையும் மறந்து விட்டு இல்லாத முதலாளியை இருப்பதாக சொல்வது உண்மைக்குப் புறம்பானது.

## எதிரிகள் யார்?

இப்படியாக தமிழக மக்கள் வறுமையில் வாடுவதின் காரணம் வடவர்களுமல்ல, பிராமணர்களுமல்ல.

இன்று மெஜாரிட்டி மக்களைச் சுரண்டுவது வெள்ளை முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் தான்.

சுரண்டும் நிலப்பிரபுக்களை ஒழித்துக்கட்டி அவர்களின் நிலம் பறிமுதல் செய்யப்பட்டு, ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டால், ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலேயர்கள் மூலதனம் பறிமுதல் செய்யப்பட்டால், திராவிட, பார்ப்பனீய, வடநாட்டு முதலாளிகளின் லாபத்தை அரசாங்கம் கட்டுபாடுசெய்து, கன இயந்திர தொழில்வளர்ச்சிக்கு சர்க்கார் கங்கணம் கட்டிக்கொண்டால், நாட்டிலே இன்று நடமாடும் பஞ்சம் நாசமாக்கப்படும்.

இந்தச் சுரண்டல் பேர்வழிகளுக்கு ஆதரவு தருவது யார்?

காங்கிரஸ் அரசாங்கம்

துன்பப்படும் மக்களுக்கு முன்னால் துப்பாக்கிநீட்டுவது காங்கிரஸ் சர்க்கார்.

இந்த ஜனவிரோத காங்கிரஸ் சர்க்காரை ஒழித்துக் கட்டி ஓர் ஜனநாயக ஆட்சி மலரச் செய்ய வேண்டியது ஒவ்வொரு ஜனநாயக சக்திகளின் கடமை.

ஊதாரிக் கூட்டத்தை ஒழித்துக் கட்டுவதற்கு மக்களின் ஒன்றுபட்ட சக்தி தேவை. கஷ்டப்படும் மக்களனைவரும் இன்று கல்கத்தா பாதையில் திரட்டினால் காங்கிரஸ் ஆட்சி அழிவது நிச்சயம்

## டால்மியாபுரம் போராட்டம்.

இன்று தமிழகத்திலே ரோட்டிலே பிணம், வீட்டிலே பிணம், மரக்கிளைகளிலே தொங்குகின்றது வாலிபர்களின் பிணம், தினம், தினம் செத்தவர்கள் பட்டியல் தினசரிப் பத்திரிக்கைகளிலே வந்தவண்ணம் இருக்கின்றது.

குற்றுயிராய் இருக்கும் கோடிக்கணக்கான வாலிபர்கள், தாய்மார்கள், இன்று தமிழகத்திலே மனைவியையும் குழந்தைகளையும் விட்டு ஓடும் கணவன்

கணவனைப் பிரிந்த மனைவி
தாயைப் பிரிந்த சேய்

தன்பெற்ற குழந்தையை விலைபேசி விற்கும் விபரீதத் தாய்.

கண்ணீர் வடிய கையில் மூட்டையுடன் கையேந்தி பிச்சை கேட்கும், பலகுடும்பங்களை இன்று கடைவீதிகளிலே காணலாம்.

பட்டினி தாங்காமல், பசியின் கொடுமையால், பாஷாணம் சாப்பிட்டு மடியும் குடும்பங்கள் பல. மனிதனின் விஞ்ஞான கரமான முன்னேற்றம் பற்றிப்பேசும் இந்தக் காலத்திலே தான் அவனின் சந்ததிகளின் பிணம் அவநிலையை நாட்டிலே காண்கிறோம்.

இந்நிலையை எதிர்த்துப் போராடவேண்டும் என்று இளைஞர்கள் துடிதுடிக்கும்போது

அவமானம்............அவமானம்
எது? என்ன?
வறுமையால் வாடி அதனால் தெருவில் காணும் பிணமா?
இல்லை.........இல்லை
வேறெது அவமானம்?
வடவர்களின் பெயர்! தமிழகத்திலே
ஏ, தன்மானத் தம்பிகளே
திராவிடத்தின் சிங்கங்களே
இதை சிந்தித்துப் பாருங்கள்

புறப்படுங்கள் போர்க்களத்திற்கு
புறமுதுகாட்ட வேண்டாம் தோழர்களே,

துப்பாக்கியைக் கண்டு அஞ்சவேண்டாம்
சிறையைப் பார்த்து சிந்திக்க வேண்டாம்
"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"

அதோ புரட்சி கவிஞனின் கவிதை ரீங்காரம் புரிகின்றது

ஏ! சேர, சோழ, செங்குட்டுவனின் வம்சமே, தோல்வியே கண்டறியாத வீரர்களின் சந்ததியில் தோன்றிய தோழர்களே, புறப்படுங்கள் டால்மியாபுரம் நோக்கி என்று போர் முழக்கம் புரிகிறது தி. மு. க.

## பெயர் மாற்றத்தினால் பிரச்சனை தீர்ந்துவிடுமா?

இன்றைய தமிழகத்திலே, டால்மியாவின் சுரண்டல், ஆர். வி. போன்ற வெள்ளைக்காரர்களின் சுரண்டல் திராவிட முதலாளிகளின் சுரண்டல் இருக்கின்றன.

டால்மியாபுரம் கல்லக்குடியாக மாற்றப்பட்டால் டால்மியாவின் சுரண்டலைத் தடுத்துவிட முடியுமா?

இன்று வெள்ளை முதலாளி ஆர். வி. பட்டி என்று பெயர் வைத்திருக்கிறான்.

மற்றோர் புரத்தில் தமிழ்நாட்டின் முன்னாள் மன்னன் பாண்டியனின் பெயரால் மில்லும், பேங்கும், இன்சூரன்ஸ் கம்பெனியையும் நடத்துகிறான்.

பாண்டியனின் பெயர் வைத்திருக்கின்றான் என்றால் நாம் பரம சந்தோஷம் அடைய முடியுமா? முடியாது.

பெயரல்ல முக்கியம்

அவர்களின் சுரண்டல் அறவே ஒழித்தெறியப்பட வேண்டும்.

நாட்டை சுரண்டும் வெள்ளை முதலாளிக்கும், அவர்களின் கூட்டாளிகளாக இருக்கும் டால்மியா, பிர்லா, டாட்டா, கும்பலின் கொள்ளைகளை பாதுகாக்கும் கேடயமாக விளங்குகின்றது காங்கிரஸ் சர்க்கார்.

ஆங்கிலேயர்களின் சுரண்டலினால் தமிழகம் தாழ்ந்து வருகின்றது. பசுகள் மடிந்து வருகின்றார்கள் மக்கள் மடிவதிலிருந்து காப்பாற்ற மாபெரும் போராட்டம்.........யாரால்?

தமிழகத்திலிருக்கும் தனிக் கட்சியாலல்ல

சிதறிக் கிடக்கும் சிறு சிறு கட்சிகள் எல்லாம் சீற்றம் கொண்டு சீறி எழுந்தால்? ஒன்றுபட்ட போராட்டத்தின் முன் உலுத்தர்கள் கூட்டம் ஒழிக்கப்படும்.

மலரும் ஜனநாயக ஆட்சி

மலர்ந்த ஜனநாயக ஆட்சியிலே மாற்றவேண்டிய, பெயர்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரமாயிரம்.

இந்த நாட்டைக் கொள்ளையடித்த ஏகாதிபத்தியத்தின் பெயர்கள் எங்கெங்கு இருக்கின்றதோ அங்கெல்லாம் விடுதலைக்காக போராடிய வீரர்களின் பெயர்கள் பொறிக்கப்படும். அதிலே ஆர். வி. யும் தப்பமுடியாது, டால்மியாவும் தப்பமுடியாது.

சிந்தியுங்கள் தி. மு. க. தோழர்களே, சிந்தித்து முடிவு கட்டுங்கள்.

தற்போது வேண்டுவது பஞ்சஎதிர்ப்பு போராட்டமா? அல்லது பெயர் மாற்றுப் போராட்டமா? என்று.

தி. க. பிள்ளையாரை உடைப்பதன் மூலம் பகுத்தறிவு வளர்ந்துவிடுமா?

தமிழகத்திலே தெய்வபக்தி என்பது கஷ்டப்படும் மனிதன் உள்ளத்திலே தோன்றுவது கடவுளே காப்பாற்ற மாட்டாயா? என்று கஷ்டத்தைப் போக்க கடவுள் எண்ணம்.

இது மூட நம்பிக்கை. விஞ்ஞானப் பார்வையில்லாத, விவரம்புரியாத பைத்தியக்காரவாதம், கடவுள் காப்பாற்றுவார் என்பது. இது மூடநம்பிக்கை. இதைப் போக்க பிள்ளையாரையோ, கிருஷ்ணன் பொம்மையையோ உடைத்து விட்டால் பக்திமான் புத்திமானாகி விடுவானா? அதுதான் கிடையாது.

அவனுக்கு, ஒற்றுமை பற்றியும், ஒற்றுமையின் போராட்டத்தினால் கிட்டும் வெற்றி பற்றியும் வெற்றியினால் விரட்டப்படும் பொருளாதார நெருக்கடி பற்றியும் விஞ்ஞான ரீதியில் விளக்கிக் கூறிவிட்டால் நடைமுறையில் தெளிவு காண்பான்.

வரமாட்டான் மூடநம்பிக்கையுள்ளவன் ஆகவே தான் நாங்கள் முதலில் பகுத்தறிவுப் போராட்டம்.

பின்னால் பொதுவுடமைக்கான போராட்டம் என்கின்றார்கள் தி. க. தோழர்கள்.

இது காங்கிரஸ்காரர்கள் பேசுவதுபோன்று, முதலிலே, சுதந்திரப் போராட்டம், இனிமேல் பொருளாதார விடுதலைக்கான போராட்டம் என்று புரட்டு சித்தாந்தம் பேசுகின்றார்களே, அதுபோல் இருக்கின்றது தி. க. வின் வாதம். பொருளாதாரப் போராட்டமும் பகுத்தறிவுப் போராட்டமும் ஒன்றோடொன்று பின்னப்பட்ட போராட்டம் என்ற எதார்த்த உண்மை வாதத்தை தி. க. தோழர்கள் பார்க்க சிந்திக்க மறுக்கின்றார்கள்.

சரித்திரத்தைத் திரும்பிப்பார்க்க தி. க. தோழர்கள் சங்கடப்படுகின்றார்கள்.

பல இனங்கள், பலமொழிகள், பல தெய்வ வழிபாடுகள், இருந்த நாட்டிலே புரட்சியைக் கொண்டுவந்தது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி.

எப்படி சாத்தியமாயிற்று?

முதலிலே பகுத்தறிவுப் பிரச்சாரம், பின்னால் பொருளாதாரப் புரட்சியல்ல ரஷ்ய நாட்டிலே நடந்தது.

ஜார்மன்னன் கொடுமையால் வறுமையால் வாடித் தவித்த மக்களுக்கு மன்னன் ஒழிக்கப்பட்டால் மாண்டு மடியும் பஞ்சம் பட்டினி, என்ற கோஷத்தின் மத்தியிலே திரட்டப்பட்ட மக்களின் போராட்டத்தினால் மன்னன் ஒழிக்கப்பட்டான்.

மலர்ந்தது பொதுவுடமைப் பூங்கா. அடுத்தபடியாக சீனாவிலே எத்தனை மதங்கள், எத்தனை மூடப் பழக்கவழக்கங்கள் இதத்னையும் எதிர்த்து ஒன்றுசேர்த்தது எந்தப் பகுத்தறிவு.

பொருளாதார நெருக்கடி என்ற போர்க்கோஷம் தான் சீனாவின் விடுதலை.

ரஷ்ய மக்களைக் காட்டிலும், சீன மக்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களா? தமிழ்மக்கள். ஏன் தமிழகத்திலே பொருளாதார நெருக்கடியை எதிர்த்து போராட வரமாட்டார்கள் என்ற வரட்டுவாதம் இங்கே பொருளாதார போராட்டம் வேண்டாம்.

பகுத்தறிவு போராட்டம் தான் வேண்டும் என்று சொல்வது சரியா? சிந்திக்கட்டும் தி, க. தோழர்கள்.

வளர்ந்து வரும் பொருளாதாரப் போராட்டத்தில் எரிந்துபோகும் ஜாதிக்கொடுமை, என்பதை மறுக்கின்றது தி. க. இந்தியாவிலே ஏகாதிபத்திய போராட்டம் நடத்தினேம், எத்தனை இன மக்களை ஒன்று சேர்த்து, இந்த உண்மையை நாம் மறந்துவிட முடியுமா?

ஏன்? சமீபத்திலே நடந்த கல்கத்தா போராட்டத்திலே பங்குகொண்டவர்கள் எத்தனை தெய்வவழிபாடுஉள்ளவர்கள் ஒன்று சேர்ந்து நடத்தினார்கள் உரிமைக்கானப் போராட்டத்தை.

ஜாதிக்கொடுமை ஒழிந்து பகுத்தறிவுப் பிரச்சாரம் வளர்ந்து, பின்னல் தான் பொருளாதாரப் போராட்டம் என்பது—

தாயைக் கொல்லும் பஞ்சத்தை தடுக்க வகையறியாமல் வாயைப்பிளந்து சும்மா வந்தேமாதரம் என்பார் என்ற பாரதியின் பாடல் ஞாபகம் வருகின்றது.

மார்க்ஸைப் பற்றியும் மாசேதுங்கைப் பற்றியும், லெனினைப் பற்றியும், ஸ்டாலினைப் பற்றியும் போற்றிப் புகழும் இந்த தி. க. தி. மு. க. தோழர்கள் அவர்கள் காட்டிய வழியை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

மறுப்பதோடு மட்டுமல்லாமல் நாங்கள் சொல்வதுதான் மார்க்ஸீஸம் என்று திரிபுவாதம் புரிகிறார்கள்.

மார்க்ஸும், லெனினும், ஸ்டாலினும், மாசேதுங்கும் எத்தனை தெய்வ விக்ரகங்களை உடைத்தார்கள். சரித்திரம் இருந்தால் கூறட்டும் தி. க. தோழர்கள்.

திசைவழி திருப்பும்படியான போராட்டத்தை நடத்திக் கொண்டு, அதற்கு மார்க்ஷீய போர்வை போர்த்தவேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன் தி. க. தி. மு. க. தோழர்களே.

## பார்ப்பனீயம்

இந்த நாட்டிலே மூட பழக்கங்களை சிருஷ்டித்து மன்னர்களும், நிலப்பிரபுக்களும், மக்களைச் சுரண்டுவதற்கு மதமும் மூடபழக்கவழக்கங்களும் இவர்களின் மறைவிடமான திரையாக உண்டாக்கினார்கள்.

இந்தத் திரை மறைவிற்கு சில படித்த பார்ப்பனீயக் கவிகள், புரோகிதர்கள் தீபம போட்டார்கள், என்பது உண்மை. அதற்காக அந்த மதத்திலே பிறந்த அத்தனை தோழர்களையும் எதிர்ப்பது சரியா?

இப்படி நான் எழுதினால் தி. க. தி. மு. க. தோழர்கள் நாங்கள் பார்ப்பனீயத்தைத் தான் எதிர்க்கின்றோம் பார்ப்பனீயர்களை அல்ல, என்று பட் என்று பதில் சொல்லுவார்கள்.

பாப்பான் பிறவி முதலாளி என்று வாதாடுவது தி. க. தி. மு. க. தோழர்கள்.

முதலாளி என்பவன் மூலதனத்தை பெட்டியில் பூட்டி வைத்திருப்பவன் அல்ல மூலதனம் போட்டு தொழில் நடத்தி அதனால் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சிக் குடிப்பவன் தான் முதலாளி என்பது மார்க்சிசம்.

ஒரு ஜாதியில் பிறந்தவன் பிறவியினால் முதலாளியாகின்றான் என்றால், நம் எதிரிலே வேலைசெய்யும் ஹோட்டல் தொழிலாளி, போதாத சம்பளம் வாங்கும் பேங்க் குமஸ்தா, மூச்சுத் திணற மாவு அறைக்கும் அம்மாமி, வாடகைப் பணம் கொடுக்க முடியாமல் வாடிவதங்கும் பலகுடும்பங்கள், பள்ளிச் சம்பளம் கட்ட முடியாமல் சுண்டல் விற்க அனுப்பும் சுந்தராமய்யர் குடும்பம், அத்தனையும் பிறவி முதலாளிக் குடும்பங்கள் தான் என்று நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? தி. க. தி. மு. க. வாதப்பிரகாரம் இந்தவாதம் பார்ப்பனீய எதிர்ப்பல்ல.

பார்ப்பன ஜாதி எதிர்ப்பு என்பதை இந்தத் தோழர்கள் ஏற்க மறுக்கின்றனர்.

கஷ்டப்படும் ஏழைப் பார்ப்பனத் தோழர்களையும் சுரண்டும் கும்பல்களையும் தனிமைப்படுத்துவதற்கு பதிலாக, பார்ப்பனர்கள் எல்லாம் பிறவி முதலாளி என்றால், ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால சுரண்டிப் பிழைக்கும் சங்கராச்சாரியின் துணைக்கு ஏழைத் தோழர்களையும் இடித்து விரட்டுகின்றது இதுசரியா?

இப்படி தி. க. தி. மு. க. பேசும் வாதமானது ஜெர்மனியை யூதமதஸ்தர்கள் சுரண்டி விட்டார்கள், ஆகவே ஜெர்மனியிலுள்ள யூதர்கள் அத்தனை பேர்களையும் ஒழித்துக் கட்டுங்கள், என்று வேட்டையாடிய ஹிட்லரை நமக்கு ஞாபகப் படுத்துகின்றது, தி. க. தி. மு. க. பார்ப்பனீய எதிர்ப்பு பிறவி முதலாளிக் கோஷம்.

ஆனால் ஒழிந்தது ஹிட்லர் தான் யூத மக்கள் அல்ல.

தி. க. தி. மு. க. வாதம் ஓநாய் கதைபோல் இருக்கின்றது

குளத்தின் ஓரமாக நின்று தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டியைப் பார்த்து ஓநாய் கேட்டது:

ஏ ஆட்டுக்குட்டியே ஏன் தண்ணீரை கலக்கினாய் என்றது?

ஐயோ, நான் கலக்கவில்லையே என்று நடுக்கத்துடன் பதிலளித்தது ஆட்டுக்குட்டி.

அப்படியா? நீ இல்லாவிட்டால் உன் சந்ததிதான் கலக்கியது. ஆகையால் உன்னை என்ன செய்கிறேன் பார் என்று ஆட்டுக்குட்டியின் மேல் ஓநாய் பாய்ந்து கொன்று தின்றது என்ற ஓர் குட்டிக்கதை ஞாபகம் வருகிறது தி. க. தி. மு. க. வாதத்தைப் பார்த்து.

இந்த வாதத்தின் சின்னம்தான் தோழர் P. ராமமூர்த்தியை இவர்கள் போலித் தலைவன் என்று புரட்டு வாதம் பேசுவதும், ஹிட்லர் யூதர்களை எதிர்த்தான், அமெரிக்கர்

கள் ஜனநாயகம் நீக்ரோக்களை விரட்டுகின்றது, மலானிசம் இந்தியர்களை துரத்துகின்றது அதேபோல் திராவிடநாடு கோஷம், பார்ப்பனத் தோழர்களை விரட்டுவது. இனவெறிக் கோஷம் எந்த நாட்டிலும் வெற்றிபெற்றதில்லை. ஆனால் சீர்குலைவு செய்திருக்கின்றது.

## திராவிடநாடு.

பார்ப்பனீய ஆதிக்கமும், வடவர்கள் சுரண்டலும் ஒழிக்கப்பட்ட இன்பத்திராவிடம். இதன் எல்லை இன்னும் இல்லை.

திராவிட நாட்டிலே தெலுங்கு பேசும் ஆந்திரர்களும், தமிழ் பேசும் தமிழர்களும், மலையாளம் பேசும் கேரளர்களும் சேர்ந்து வாழ்வார்கள்.

இதன் பொதுமொழி தமிழ். ஏற்றுக்கொள்வார்களா? மலையாளிகளும், ஆந்திரர்களும்? என்றால் தமிழில் இருந்து தான் இரண்டு மொழிகளும் பிறந்தது என்று எடுத்துரைப்போம் என்கின்றார்கள்.

ஐயோ...... ஆந்திரா பிரிந்து விட்டதே, பரவாயில்லை மீதம்தான் திராவிடம். மலையாளிகள் ஐக்கியகேரளம் என்கிறார்களே என்றால், அட ஏய்யா சும்மா பேசுகிறீர் தஞ்சை ஜில்லா தனியாகக் கிடைத்தாலும் இன்பத் திராவிடமென அழைப்போம் என்கின்றார்கள். ஏய்யா தமிழகம் என்று ஏன் சொல்லக்கூடாது என்றால்

சரித்திரத்தை மாற்றுவதா? என்கிறார்கள். சரித்திரத்தை மாற்றி அமைக்கவேண்டாம், ஆனால் மாறி இருக்கும் சரித்திரத்தைப் பார்க்க வேண்டாமா?

எப்படி மாறும் சரித்திரம் இதோ இருக்கின்றதே இர்திராவுக்கு நேரு எழுதிய கடிதத்திலே தென்னாடு திராவிட நாடு என்று வாதாடுகிறார்கள்.

ஆம்...... இருக்கின்றது...... ஆனால் அதே பக்கத்திலே மற்றொரு வாக்கியம் இருக்கின்றது அதைப் படியுங்கள் என்றால் பார்க்க மறுக்கின்றார்கள். அது என்ன?

மனிதன் மூதாதை குரங்கு. குரங்காக இருந்தவன் யாரும், மாற்றுமல் காலப்போக்கிலே சரித்திர வளர்ச்சியாலேயே மனிதனுக வந்துவிட்டான். இப்போது மனிதனுக மாறிவிட்டவனை சரித்திரச் சான்றுகள் எடுத்துக்காட்டி நீ குரங்குதான், உன்பெயரை குரங்கு என்றுதான் அழைப்பது சரி, உன்னை சூழ்ச்சிக்காரர்கள் சுரண்டல் பேர்வழிகள் மோசக்காரர்கள் மனிதன் என்று அழைத்து விட்டார்கள். ஆகவே நீ குரங்கு, குரங்குதான். என்று வாதாடுவது சரியா?

அதேபோல் தான் மனிதன் குரங்காக இருந்த காலத்திலே இன்றைய தமிழகம் திராவிட இனமாக இருந்தது ஆனுல் குரங்கு மனிதனுக மாறிய காலத்திலே இன்றைய திராவிடம் இன்பத் தமிழகமாக மாறி இருக்கின்றது.

காலப்போக்கிலே காணுமல்போன திராவிடத்தை எப்படியாவது அமைப்போம் என்று போராடுவது மனிதனைக் குரங்காக்கு, என்று வாதாடுவது போலிருக்கிறது

ஆகவேதான் இன்று திராவிடநாடு என்பது அடித்த காற்றிலே மறைந்த மண்மேடு, அதைத் தோண்டவேண்டாம் என்கின்றேம்

பொன்மேடாக இருந்தால் தோண்டலாம் ஆனுல் மண்மேடு, மறைந்ததினுல் ஆபத்து யாருக்கும் இல்லை, என்கின்றேம்.

திருவிதாங்கூரிலே சேர்க்கப் பட்டிருக்கும் தமிழர் பெரும்பால்வசிக்கும் பகுதிகளையும், புதுவை காரைக்காலிலே பிணைந்துகிடக்கும், தமிழர்கள் வசிக்கும் பிரதேசத்தையும் சேர்த்து ஐக்கிய தமிழகம் என்கின்றேம்

தி. க. தி. மு. க. தோழர்களே பஞ்சம் பட்டினியைப் போக்க பார்ப்பனீயத்தையும், வடவர்களையும் அல்ல ஒழிப்பது. பதிலாக கோடிக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டு மக்களைக் கொன்று குவிக்கும் நிலப்பிரபுக்களையும், வெளிநாட்டிலிருந்து வந்து, தமிழ் மக்களைச் சுரண்டும் பிரிட்டீஸ் முதலாளிகளையும் ஒழித்துக்கட்டி, தமிழ்நாட்டு

வடநாட்டு முதலாளிகளின் சுரண்டலை கட்டுப்பாடு செய்யப் பட வேண்டுமேயானால் முதல் முதலிலே ஒழிக்கப்பட வேண்டியது காங்கிரஸ் சர்க்கார்.

ஒழிக்க காங்கிரஸ் ஆட்சியை ஒற்றுமைதேவை, ஒன்று படுவோம், தோழர்களே ஒன்றுபடுவோம், கல்லறையை நோக்கி காலடி எடுத்துவைக்கும் மக்களைக் காப்பாற்ற ஒன்று படுவோம். சுரண்டல் பேர்வழிகளை சுட்டெரிக்க ஒன்று படுவோம்.

சிதறிக்கிடக்கும் தமிழர்களைச் சேர்த்து அதற்கு ஐக்கிய தமிழகமென அழைக்க ஒன்றுபடுவோம்.

அமைக்கப்படும் ஐக்கிய தமிழகத்திலே ஐக்கிய முன் னணி சர்க்கார் தழைக்கும். தழைத்தோங்கும் ஜனநாயக சர்க் காரிலே ஒழிக்கப்படும் நிலப்பிரபுக்கள், பிரிக்கப்படும் நிலங் கள், ஏழை விவசாயிகளுக்கு.

பிரிட்டிஸ் மூலதனம் பிடுங்கப்பட்டு, சுரண்டல்பேர்வழி களின் பெயர்கள் சுரண்டப்பட்டு, தேசத்திற்காக போராடிய தியாகிகளின் நாமம் தீட்டப்படும்.

இன்பத் தமிழகம் இணையில்லா தேன்மொழி ஆட்சி செலுத்தும்போது பஞ்சம் ஓடிடும், பட்டினி பறந்திடும்.

வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கவே இருக்காது.

இந்தக் கனவுகளை நனவாக்க முற்போக்கு சக்திகள் அத்தனையும் ஒன்றுபட்டு போராட வேண்டும் தோழர்களே போராடவேண்டும்.

ஓங்குக ஐக்கிய ஜனநாயக முன்னணி

வாழ்க ஐக்கிய தமிழகம் !

ஒழிக சுரண்டல் பேர்வழிகள்.

---

நேரு பிரஸ், மதுரை:—53.

உலக மக்களின் நலனே
என் நலன்-என வாழ்ந்தார்

—மகாத்மா

★

மக்களின் மனத் திருப்தியே
எங்கள் லட்சியம் என்ற
முறையில் உங்கள் உருவங்
களை உன்னதமாக அமைத்
துக் கொடுக்கும்

உண்மை-உயிர்-ஓவியக் கலை

ஸ்தாபனம்

# மகாத்மா

# போட்டோ ஸ்டுடியோ

45-A, மேலாவணிமூல வீதி, :: மதுரை

FAMOUS




# "BABY BRAND"

## APPALAM & CHIPS

The most economical food with richest vitamin value

Prepared:-

## S. R. O. APPALA DEPOT,

73, Amman Sannathi, MADURAI